பஞ்செட்டி வேலம்மாள் பள்ளியில்

# சாலை பாதுகாப்பு கருத்தரங்கம்




▸ பொன்னேரி அடுத்த பஞ்செட்டி வேலம்மாள் மேனிலை பள்ளியில் செங்குன்றம் வட்டார போக்குவரத்துறை சார்பில் நடந்த சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கில் விழிப்புணர்வு குறும்படத்தை நடிகர் தாமு வெளியிட்டார். அருகில் போக்குவரத்து அலுவலர் சம்பத்குமார் , மோட்டார் வாகன ஆய்வாளர் நெடுமாறன், ரமேஷ், முருகேசன், பள்ளி முதல்வர் கோதண்டம், துணை முதல்வர் சிவகுமார் ஆகியோர் உள்ளனர் .

பொன்னேரி, ஜூலை 14: செங்குன்றம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் பொன்னேரி பஞ்செட்டி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று நடந்தது. வட்டார போக்குவரத்து அலுவலர் சம்பத் குமார் தலைமை தாங்கினார். மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நெடுமாறன், ரமேஷ், முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக திரைப்பட நடிகர் தாமு கலந்து கொண்டு, ஆய்வாளர் நெடுமாறன் எழுதி, இயக்கிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த இனிய பயணம் என்ற குறும் படத்தை வெளியிட்டார்.

அதனை வேலம்மாள் பள்ளி முதல்வர் கோதண்டம் பெற்று கொண்டார். பின்னர் தாமு சாலை விபத்து மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து விளக்கி பேசினார். மோட்டார் வாகன ஆய்வாளர் நெடுமாறன் பேசுகையில், வாரந்தோறும் புதன்கிழமைகளில் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலை மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் சுங்கச்சாவடி போன்ற இடங்களில் மக்களின் நலன் கருதி விழிப்புணர்வு கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

இதில் வாகனஓட்டிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். நிகழ்ச்சியில் பள்ளி துணை முதல்வர் சிவகுமார், மாணவ, மாணவிகள் மற்றும் வாகன ஓட்டிகள் என 1500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.